தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 15.07.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். CP 1977/A/2024

திரு.ம.மனோகுமார் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
வட்டாரக் கல்வி அலுவலகம்,
சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (15.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.ம.மனோகுமார் அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திரு.சி.பெருமாள்<br>பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,<br>வட்டாரக் கல்வி அலுவலகம், சோளிங்கர்,<br>இராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 12.01.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், சோளிங்கர் வட்டாரக் கல்வி அலுவலர்-1 அவர்கள் 01.01.2022 முதல் 10.01.2024 வரை பிறப்பித்த ந.க.எண்.கொண்ட செயல்முறைகளின் எண்ணிக்கை என்ற தகவல் உட்பட 17 இனங்களில் தகவல் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 16.02.2024 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | ----- |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 18(1) -ன் கீழான புகார் மனு நாள் | 04.04.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திரு.சி.பெருமாள், கண்காணிப்பாளர், வட்டாரக் கல்வி அலுவலகம், சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 50/அ1/2024, 16.02.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், மனுதாரர் விண்ணப்பத்தில் கையெழுத்திடாமல் சீல் வைத்திருந்ததாகத் தெரிவித்து அதனால் தான் தகவல் அளிக்கவில்லை என்றும் தெரிவித்தார். தற்போது ஆணையம் உத்தரவிட்டால் தகவல் அளிப்பதாகவும் தெரிவித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தான் கோரிய தகவல்களுக்கு கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்ததாகவும், ஆனால் எவ்வளவு பக்கம் என்றும், கட்டணம் எவ்வளவு என்றும், எந்த கணக்கு தலைப்பில் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும், உரிய தகவல் வழங்காமல், தவறான தகவல் வழங்கிய பொதுத்தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்படி அபராதமும், துறை ரீதியான நடவடிக்கையும் எடுக்கக் கோரினார்.

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் அளிக்கப்படவில்லை என ஆணையம் கருதுகிறது. மேலும், மனுதாரர் விண்ணப்பத்தில் கையெழுத்திடாமல் சீல் வைத்திருந்ததால் தான் தகவல் அளிப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாக ஆணையம் கருதுகிறது. எனவே, பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து பின்வருமாறு உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களுக்கு உரிய முழுமையான தகவல்களை <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1977/A/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ கண்காணிப்பாளர்,
வட்டாரக் கல்வி அலுவலகம்,
சோளிங்கர்,
இராணிப்பேட்டை மாவட்டம் - 631 102.

**<u>மனுதாரர்</u>**

திரு. ம. மனோகுமார்
41/2, அண்ணா நகர் 5-வது தெரு,
BDO அலுவலகம் பின்புறம்,
சோளிங்கர்,.
ராணிப்பேட்டை - 631 102.

Copy to file

KRM/PA 16.07.2026